**பதவிய பிரதேச சபை**
**அநுராதபுர மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 05 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதவிய பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதானகருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பரீட்சை மீதியில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 24,000 ஆன வரவு மீதியொன்றும் ரூபா 153,443 கூட்டுத்தொகையான 02 செலவு மீதிகளும் நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தன.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 126,480 தொகையான 272 நூலகப் புத்தகங்களின் பெறுமதி கணக்கீடு செய்யாமையால் நூலகப் புத்தகங்களின் பெறுமதி மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தில் பங்களிக்கும் கணக்கு அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) புறநெகும செயற்திட்டத்தின் நிதி ஏற்பாட்டின் பேரில் நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 808,737 தொகையான நிலையான சொத்துக்கள் கணக்குகளிலிருந்து விடுபட்டமையால் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தில் பங்களிக்கும் கணக்கு அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்தொகையில் தேறிய சொத்துக்களில் ரூபா 109,752,491 ஆக இருந்த போதிலும் திரண்ட நிதி மற்றும் ஒதுக்கங்களின் கூட்டுத்தொகை ரூபா 110,053,442 ஆக இருந்தமையால் அப்பெறுமதிகளுக்கு இடையே ரூபா 300,951 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் நிதி தொழிற்பாடு தொடர்பான கூற்றில் அரசின் மீண்டெழும் பங்களிப்பு ரூபா 8,083,512 என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் வருமானச் செலவுக் கணக்கில் மீண்டெழும் வருமான தலைப்பின் கீழ் வருமான மானியமாக ரூபா 8,538,316 ஆக காண்பிக்கப்பட்டமையால் மீண்டெழும் வருமானங்களில் ரூபா 454,804 வேறுபாடொன்று காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் திரண்ட நிதியம் மற்றும் பற்றாக்குறை கணக்கின் மீதி ரூபா 1,467,307 ஆக இருந்த போதிலும் நிதிக்

கூற்றுக்களின் பிரகாரம் அக் கணக்கின் மீதி ரூபா 893,856 ஆக இருந்தமையால் பேரேட்டுக் கணக்கு மற்றும் நிதிக்கூற்றுகளுக்கு இடையே ரூபா 573,451 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 109,206,286 ஆக இருந்த போதிலும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தில் பங்களிக்கும் கணக்கின் பெறுமதி ரூபா 109,159,586 ஆக இருந்தமையால் அந்த இரண்டு கணக்குகளுக்கு இடையே ரூபா 46,500 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெற வேண்டிய கணக்குகள்

வருடக் கணக்காக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்படும் ரூபா 216,285 கூட்டுத்தொகையான நீர் வேலை களஞ்சிய மீதிகளை தீர்வு செய்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

வருடக் கணக்காக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்படும் ரூபா 13,028 கூட்டுத்தொகையான நானாவதி கடன்கொடுத்தோர் மீதிகளை மீளாய்வாண்டிலும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 108,663,108 தொகையான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

1.3.5.1 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டம் 177 ஆம் பிரிவு | சபையில் சேவை புரியும் தற்காலிக மற்றும் அமைய ஊழியர்களுக்காக பணிக்கொடை கொடுப்பனவிற்காக உத்தேச திட்டமொன்றை தாபிப்பதற்கு உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி | |
| (i) விதி 5.11 | சபைக்குச் சொந்தமான வழியில் காசு மற்றும் ஏனைய பெறுமதியான பொருட்கள் தொடர்பாக முறையான காப்புறுதி மேவுகையொன்று எடுக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்துதல் சபையின் செயலாளரின் பணியாக இருந்த போதிலும் அவ்வாறு காப்புறுதி |

| | | |
|---|---|---|
| | | மேவுகையொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | விதி 115 | களஞ்சிய வழங்கலுக்காக கொடுப்பனவு செய்யும் போது குறித்த பொருட்கள் உடன்படிக்கையின் பிரகாரம் தரமானதாக களஞ்சியத்திற்கு கிடைத்தாகவும் அவை அட்டவணைகளில் உள்ளடக்கப்பட்டதாகவும் களஞ்சியத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரால் குறித்த உறுதிச்சீட்டில் சான்றிதழொன்று வழங்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 55,790 பெறுமதியான களஞ்சியப் பொருள் கொள்வனவின் போது சபையினால் அத்தேவைப்பாடு நிறை வேற்றப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | விதி 217 மற்றும் 218 | சபைக்குச் சொந்தமான சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பீஎஸ் 46 இன் பிரகாரம் பதிவேடொன்று பேணப்படாமல் இருந்ததுடன் சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு ஆண்டிலும் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2014 திசெம்பர் 15 ஆந் திகதிய 2014/14 ஆம் இலக்க மாகாண திறைசேரிச் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான ரூபா 108,663,108 கூட்டுப்பெறுமதியான நிலையான சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருந்த போதிலும் சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்துக்கள் வகைப்படுத்தபபட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | சபை பயன்படுத்தும் கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

**02. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 229,185 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 229,787 ஆகும்.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியலிடப்பட்ட வருமானம். சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2017 சனவரி 01 இல் ஆரம்ப மீதி | 2017 இல் பட்டியலிடப் பட்ட வருமானம் | 2017 இல் சேகரிக்கப்பட்ட வருமானம் | | 2017 திசெம்பர் 31 இல் நிலுவை வருமானம் |
|---|---|---|---|---|---|
| | பெறுமதி | பெறுமதி | 2017.01.01 மீதியில் பெறுகை பெறுமதி | 2017 பட்டியலிடப்பட்டது காசாக பெறுமதி | பெறுமதி |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி | - | 550,000 | - | 346,200 | 203,800 |
| வாடகை | 36,300 | 2,964,600 | 29,300 | 2,541,385 | 430,216 |
| அனுமதிப் பத்திரங்கள் | 275,850 | 611,000 | 27,100 | 594,300 | 265,450 |
| சேவைகளுக்கான கட்டணங்கள் | - | 316,000 | - | 271,596 | 44,404 |
| பிடியாணையும் தண்டப்பணம் | 1,908,280 | 801,000 | - | 1,775,760 | 933,520 |
| ஏனைய வருமானம் | - | 1,119,000 | - | 119,660 | 999,340 |
| மொத்தம் | 2,220,430 | 6,361,600 | 56,400 | 5,648,901 | 2,876,730 |

**2.2.2 வருமான சேகரிக்கும் செயலாற்றல்**

வருமானம் தொடர்பாக பதிவேடுகள் முறையாக நடாத்தப்படாமை காரணமாக நிலுவை வருமான அலகுகளின் எண்ணிக்கை மற்றும் பட்டியலிடப்பட்ட வருமான அலகுகளின் அளவினை குறிப்பிடுவதற்கு சபை தவறியிருந்ததுடன் மீளாய்வாண்டில் அறவிடுவதற்கு மதிப்பிடப்பட்டிருந்த ஏனைய வருமானம் ரூபா 1,119,000 தொகையில் ரூபா 119,660 மாத்திரம் சேகரிக்கப்பட்டமையால் ரூபா 9,99,340 அதாவது 89 சதவீதத்தினை அறவிட முடியாமல் இருந்தது.

**2.2.3 வீத வரி**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 550,000 ஆக இருந்த போதிலும் அதில் 62 சதவீதமான ரூபா 346,200 மாத்திரம் ஆண்டில் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் ஆரம்பத்தில் நிலுவை வீத வரி மற்றும் வரி மீதி ரூபா 189,233 ஆக இருந்தது. எனினும் சபையின் செயலாளரினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளின் பிரகாரம் வருட ஆரம்பத்தில் நிலுவை மீதியொன்று காணப்படவில்லை.

**2.2.4 பிடியாணைக் கட்டணம் மற்றும் தண்டப்பணம்.**

மீளாய்வாண்டின் இறுதியில் சேகரிக்கப்பட வேண்டிய தண்ட பண அளவு ரூபா 2,709,280 ஆக இருந்த போதிலும் அதில் 65 வீதமான ரூபா 1,715,760 மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 933,520 தொகை மேலும் நிலுவையாக காணப்பட்டது.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 28 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அவ் விடயங்களுக்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

சபையினால் நிறைவேற்ற வேண்டிய செயற்பாடுகளுக்காக செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்களில் உக்கலடையாத பொலித்தின் போன்ற திரவியங்கள் பிளிசறு செயற்திட்டத்தின் அருகில் திறந்த வெளியில் சேகரிக்கப்பட்டு அழிக்கப்பட்டு வந்தது. இது பிரதேசவாசிகளுக்கும் பிளிசறு செயற்திட்டத்தில் நாளாந்தம் சேவை புரியும் ஊழியர்களுக்கும் சுகாதார

சிக்கல்களுக்கு முகங்கொடுப்பதற்கு நேர்ந்ததால் இப்பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காக களஞ்சிய தொகுதியொன்று நிர்மாணிக்கப்பட்டு களஞ்சியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் நீண்ட கால வேலைத்திட்டமொன்று சபையிடம் காணப்படவில்லை.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்**

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்து இருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

உள்ளூராட்சி மன்ற மறுசீரமைப்பு சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் மற்றும் முன்மொழிவுகள் செயற்படுத்துவது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | சுற்றறிக்கை இலக்கம் | பரிந்துரை இலக்கம் | விடயம் | குறைபாடுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 03 | 03 | சொத்து முகாமைத்துவம் | i. உரித்துறுதி / உரித்து / திட்ட வரைபடம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்காமை.<br>ii. காணிகளின் எல்லை குறிப்பிடப்படாமை. |
| (ஆ) | 06 | 2.2(iii) 03 | வீதி பராமரிப்பு | தொடர்ச்சியான செயற்படுத்தும் வீதி பராமரிப்பு முறையொன்று ஸ்தாபிக்கப்படாமை சபைக்குரிய வீதிகளின் எல்லைகள் வர்த்தமானியில் வெளியிடப்படாமை. |
| (இ) | 09 | 07 | மயானங்கள் | i. மயானங்கள், மற்றும் புதைகுழி இடங்கள், மயான மற்றும் புதை குழி கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வெளியிடப்படாமை<br>ii. மயானங்களின் உரித்து தொடர்பான ஆவணங்களை பாதுகாப்பாக வைப்பது உட்பட 07 விடயங்கள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை |

**3.3. மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் 17 வெவ்வேறு வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் சபையின் அன்றாட வேலைகளை நிறைவேற்றுவதற்கு தடைகள் உருவாகியிருந்தன.

(அ) 2010 ஆம் ஆண்டிற்கு முன்னர் அறவிடப்படாத ரூபா 13,125 தொகையான நிலுவை ஊழியர் கடன்களை பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு அல்லது அவ்வாறு முடியாவிட்டால் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.6, 4.3, 4.4, 4.4.1, 4.5 மற்றும் 4.6 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 விளைவற்ற / குறைப்பயன்பாட்டிலான சொத்துக்கள்**

சபைக்கு சொந்தமாக காணப்படுகின்ற வாகனங்கள் மற்றும் 04 உபபாகங்கள் பயன்பாட்டிற்கு எடுக்காமையால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றை திருத்தியமைத்து பயன்பாட்டிற்கு எடுக்கவோ அல்லது திருத்தியமைக்க முடியாதிருத்தால் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

**3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 11,619 பெறுமதியான 48 நூலகப் புத்தகங்கள் காணாமல் போயிருந்த போதிலும் அது புத்தகங்களின் பொறுமதி 2004 சனவரி 26 ஆந் திகதிய 2004/பி.ச/1 ஆம் இலக்க தேசிய நூலக சேவைகள் சபையின் மதியுரை சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

முறையான எதிர்வுகூறல் ஒன்று இல்லாமல் பாதீடு தயாரிக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் 07 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட வருமானங்கள் மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கு இடையே 15 சதவீதத்திலிருந்து 87 சதவீதம் வரையான விலகலொன்றும் 04 செலவின விடயங்களில் மதிப்பிடப்பட்ட செலவினத்திற்கு ஒப்பாக உள்ளவாறான செலவினங்களுக்கு இடையில் 24 சதவீதம் முதல் 88 சதவீதம் வரையான விலகல் அவதானிக்கப்பட்டன. அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

2015 மார்ச் 18 ஆந் திகதிய 4/2015 ஆம் இலக்க வடமேல் மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரது சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட குறைபாடுகள் சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன். பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) வருமான நிர்வாகம் | i ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்படாமை<br>ii நிலுவை வருமான சேகரிப்பு செயற்திறனாக இல்லாமை<br>iii. வருமான உத்தியோகத்தரின் வேலை மேற்பார்வை செய்யப்படாமை |
| (ஆ) திட்டமிடல் | கூட்டிணைந்த திட்டமொன்று, செயல் நடவடிக்கைத் திட்டமொன்று, பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்படாமை |
| (இ) கடன்பட்டோர் / கடன்கொடுத்தோர் | i காலப்பகுப்பாய்வு தயாரிக்காமை<br>ii அட்டவணைகள் தயாரிக்கப்படாமை |
| (ஈ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் | உக்காத கழிவுப் பொருள் மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்பாடமை |
| (உ) கணக்கீடு | கணக்கேடுகள் மற்றும் பதிவேடுகள் நாளதுவரையாக பேணப்படாமை. |
| (ஊ) நிலையான சொத்துக்கள் | i சகல சொத்துக்களும் பதிவேடுகளுக்கு உட்படுத்தாமை<br>ii பயன்படுத்தப்படாத சொத்துக்கள் காணப்படுகின்றமை<br>iii. பொருள் மெய்மையாய்வு சபை முன்மொழிவு செயற்படுத்தப்படாமை<br>iv கையேற்கப்படாத ஆதனங்களில் நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டமை. |
| (எ) உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படாமை. |